1987 மே 4]

தங்கவும், சிற்றுண்டிச்சாலையும் மற்றும் குளியல் அறையும் கழிப்பறை வசதிகளும் செய்து தர வகை செய்யப்படுகிறது. மேலும் ரோடு வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வினாப்பட்டியலில் ஏறத்தாழ 4 அல்லது 5 இடங்களைக் குறிப்பிட்டு இவை சுற்றுலா மையமாக ஆக்கப்படுமா என்று கேள்வி கேட்டிருக்கிற நிலையைப் பார்க்கிறோம். இதைக் காட்டிலும் அமைச்சர் அவர்களே ஒட்டுமொத்தமாக இன்னின்ன இடங்கள் சுற்றுலா மையங்களாக ஆக்கப்படும் என்றோ அல்லது இனி சுற்றுலா மையங்களாக ஆக்குவதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறது என்றோ அறிவித்துவிட்டால் நேரமும் மிச்சமாகும். மேலும் எல்லோருக்கும் தகவலும் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நான் பார்த்துக் கொள்கிறேன்.

578—(* வினா எண் 9563) **திரு. மு. மாரிமுத்து**: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"திருப்பரங்குன்றம்" சுற்றுலா மையமாக அறிவிக்கப் பெறும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு படைவீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றம்— முருகப் பெருமான் குடியிருக்கும் அந்த நகரத்திற்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் குடிநீர் வசதி, தங்குமிட வசதி மற்றும் கழிப்பிட வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த வசதிகளைச் செய்து தருவதற்கு பேரூராட்சிமன்ற நிர்வாகத்திற்கு நிதிவசதி இல்லை. எனவே இதைக் கருத்தில் கொண்டு மைய—மாநில அரசுகளிடமிருந்து நிதி உதவி பெற்றிட எதிர்காலத்திலாவது திருப்பரங்குன்றம் ஒரு சுற்றுலா மையமாக அறிவிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையத்திற்கும் திருத் தலத்திற்கும் வேறுபாடு இருக்கவேண்டும். அதுவும் திருத்தலம் என்றால்—ஆறுபடை வீடுகளில் ஒன்றான முருகப் பெருமான் குடியிருக்கும் இடத்தை ஒரு வெறும் சுற்றுலாத்தலமாக ஆக்கக் கூடாது. அங்கே முக்கியமாக பக்தர்கள்தான் வர வேண்டும். சுற்றுலாப் பயணிகளும் அங்கே வரலாம். அங்கே வருபவர் களுக்கு முக்கியமான அடிப்படை வசதிகளைச் செய்து தரு வதற்கு அரசைக் கேட்கலாம். ஏற்கெனவே அரசு கோயிலுக் குள்ள இடத்தை மேம்பாடு செய்ய லட்சக்கணக்கான நிதி உதவி அளித்து வருகிறது.

(முற்பகல் 10-30)

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இந்தக் கோவிலுக்கு ஒளிவிளக்கு, மற்றும் சில மேம்பாட்டுப் பணிகளுக்காக 15 இலட்சம் ரூபாய் தேவையென்று கேட்டு மைய அரசுக்கு எழுதியிருக்கிறோம்.

579—(*வினா எண் 10055) **திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சி மாநகரத்தை சுற்றுலா மையமாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரத்தில் குறைந்த செலவில் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதற்காக யாத்திரி நிவாஸ் ஒன்று மத்திய அரசின் நிதி உதவியுடன் கட்டப்பட உள்ளது. இதற்கு மத்திய அரசு ரூ. 34.00 இலட்சம் உதவி செய்ய ஆணை யிட்டுள்ளது. மேலும் காஞ்சிபுரத்தில் மத்திய அரசின் நிதி உதவியுடன் பல்லவபுர சுற்றுலா வளாகம் கட்ட திட்டமிடப்

* 474-475 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.